"துக்ளக்" இதழில் 15—1—1991 ஆம் தேதி கேள்வி-பதில் பகுதியில் ஒரு கேள்வி. "வர வர எம்.எல்.ஏ.-க்கள் மதிப்பு உயர்ந்து வருவதைப்பற்றி" என்ற ஒரு கேள்விக் குறியோடு எழுப்பி, அதற்குப் பதிலாக, "எல்லாவற்றிற்கும் விலை ஏறும்போது விஷத்திற்கும் விலை ஏறத்தானே செய்யும்!" என்று அந்த இதழ் ஆசிரியர் பதில் அளித்து இருக்கிறார்கள். ஒரு சில எம்.எல்.ஏ. க்கள் பற்றியோ, யாரோ ஒரு எம்.எல்.ஏ. வைப் பற்றியோ இப்படிப்பட்ட விமர்சனம் செய்திருந்தால் நம்மால் புரிந்துகொள்ள முடியும். இந்த சட்டமன்றத்தைப் பற்றி அல்ல, இந்த நாடு முழுவதும் இருக்கக்கூடிய எம்.எல்.ஏ.-க்கள் அத்தனை பேரையும், இங்கே விமர்சனம் செய்யும்போது இந்த சட்டமன்ற உறுப்பினர்களை அவமதிப்பது மட்டுமல்ல, இந்த ஜனநாயகத்தையே அவமதிப்பது ஆகும். "விஷம்" என்று எம்.எல்.ஏ. க்களைச் சொல்லிவிட்டால் அப்படிப்பட்ட எம்.எல்.ஏ.-க்கள் தேவையில்லை. விஷத்தை யாரும் தேவையென்று சொல்ல மாட்டார்கள். அப்படி என்று சொன்னால் ஜனநாயகமே தேவையில்லை என்றும் இந்த நாடு பாசிசத்தை நோக்கிச் செல்லவேண்டும் என்றும் அந்த இதழ் ஆசிரியர் சொல்கிறாரா; சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்று அந்த இதழ் ஆசிரியர் சொல்கிறாரா என்பதே புரியவில்லை. ஆகவே, இது ஜனநாயகத்தை அவமதிக்கக்கூடியது, சட்டமன்ற உறுப்பினர்களைக் கேவலப் படுத்துவது மட்டுமல்ல, மக்களாட்சித் தத்துவத்தையே அவமதிப்பது என்ற முறையில் இந்த உரிமை மீறல் பிரச்சினை குறித்து உரிமைக் குழுவிற்கு விடுவதற்குத் தாங்கள் இசைவு தர வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறித்து இதழ் ஆசிரியரிடமிருந்து விளக்கம் கேட்டுப் பின்னர் என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

சென்னை பொது மருத்துவ மனையில் பத்து அறுவை சிகிச்சை நிலையங்கள் இயங்காதிருப்பது குறித்து.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை, அரசு பொது மருத்துவமனையில் உள்ள பதின்மூன்று அறுவை சிகிச்சை நிலையங்களில் பத்து அறுவை சிகிச்சை நிலையங்கள் இயங்காமல் இருப்பது குறித்த" பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

1991 சனவரி 25] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

அறிக்கை.

சென்னை அரசு பொது மருத்துவ மனையில் உள்ள மொத்த அறுவை அரங்கங்களின் எண்ணிக்கை 17 ஆகும். இவற்றில் குளிர்சாதன வசதிகளுடன் உள்ள பெரிய அறுவை அரங்கங்கள் விவரம் வருமாறு :—

பொது அறுவை சிகிச்சைத் துறை ..	6
எலும்புமுறிவு சிகிச்சைத் துறை ..	1
இருதய அறுவை சிகிச்சைத் துறை ..	1
நரம்பியல் அறுவை சிகிச்சைத் துறை ..	1
சிறப்புத் துறைகளுக்கு	1
மொத்தம் ..	10

2. குளிர்சாதன வசதியுடன் இயங்கிவரும் சிறிய அறுவை அரங்கங்கள் இரண்டின் விவரம் வருமாறு :—

இருதய அறுவை சிகிச்சை	1
தொழுநோய்ப் பிரிவு	1
	2

3. குளிர்சாதன வசதி அற்ற நிலையில் பின்வரும் ஐந்து சாதாரண சிறிய அறுவை அரங்கங்களும் உள்ளன :—

செப்டிக் (நச்சுத்தடை)	1
பால்வினை நோய்த் துறை	1
புற்றுநோய்த் துறை	1
டெட்டனஸ் பிரிவு	1
மூட்டு மற்றும் தசை நோய்	1
	5

4. மேற்கண்டவாறு மொத்தம் உள்ள 17 அறுவை அரங்கங்களில் பொது அறுவை சிகிச்சைக்கென அமைந்த குளிர்சாதன வசதி செய்யப்பட்ட 6 பெரிய அறுவை அரங்கங்களில் 1, 3, 5 ஆகிய மூன்று அறுவை அரங்கங்கள் மட்டும் தற்போது பொதுப் பணித்துறையால் நவீன முறையில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. அந்த மூன்று அரங்கங்கள் நீங்கலாக மீதமுள்ள 14 அறுவை அரங்கங்களும் சிறந்த முறையில் இயங்கி வருகின்றன.

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி] [1991 சனவரி 25

5. பொது அறுவை சிகிச்சைக்கென அமைந்த குளிர்சாதன வசதிகள் கொண்ட 6 பெரிய அறுவை அரங்கங்களுக்கும் குளிரூட்டப்பட்ட காற்றைச் செலுத்துவதற்காக அமைக்கப் பட்ட குழாய்கள் சுமார் 30 ஆண்டுகளுக்குமுன் அமைக்கப் பட்டவையாகையால் அவை பழுதுபட்டு இப்பொழுது அவற்றை பழுதுபார்க்க நேரிட்டுள்ளது. பெரிய அறுவை சிகிச்சை அரங்கங்கள் 2, 4, 6 ஆகியவற்றைப் பொறுத்தவரை அப் பணியை பொதுப்பணித்துறை செய்து முடித்து அந்த அரங்கங் கள் மூன்றும் 27—3—1990 முதல் நன்கு செயல்பட்டு வரு கின்றன. பெரிய அறுவை சிகிச்சை அரங்கங்கள் 1, 3, 5 ஆகிய வற்றுக்கான இந்த பழுதுபார்க்கும் பணி இப்பொழுது பொதுப் பணித்துறையால் மேற்கொள்ளப்பட்டு விரைந்து நடைபெற்று வருகிறது. அப்பணி முடிந்ததும் அந்த மூன்று அறுவை அரங்கங் களும் மீண்டும் இயங்கத் தொடங்கும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சென்னை பொது மருத்துவ மனையில் 17 அறுவை சிகிச்சை நிலையங்கள் இயங்குவதாகவும், அதில் 3 அறுவை சிகிச்சை நிலையங்கள் பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், உண்மையில் பார்க்கின்ற நேரத்தில் அங்கே மூன்று அறுவை சிகிச்சை நிலையங்கள்தான் இயங்கி வருகின்றன என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை யில், மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்க விரும்புவ தெல்லாம், இன்றைக்கு எத்தனை அறுவை சிகிச்சை நிலையங் கள் இயங்கிக்கொண்டு வருகின்றன என்பதை நீங்கள் சொல்லி யிருந்தாலும், அங்கே எத்தனை பேருக்கு சிகிச்சைகள் அளிக்கப் பட்டிருக்கின்றன ; எத்தனை பேருக்கு ஆப்பரேஷன் செய்யப் பட்டிருக்கிறது என்கின்ற விவரத்தை, கடந்த 6 மாதங்களில் அவைகளில் எத்தனை பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன என்கின்ற விவரங்களையெல்லாம் தெரியப்படுத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் இன்றைக்குச் சொல்லப்பட்டிருக்கின்ற அந்த........

10-20 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவாகக் கேளுங்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : சிறிய அறுவை சிகிச்சை நிலை யங்கள் இயங்கவில்லையென்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வுகளைச் செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்

1991 சனவரி 25] [டாக்டர் க.பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

பெற்றுக்கொண்டதற்குப் பிறகு ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் சென்று மருத்துவமனைகளிலே இதுபோன்ற அறுவை அரங்கங்களும், வாங்கப்பட்ட புதிய கருவிகளும் எந்த அளவிற்குச் செயல் படுத்தப்படுகின்றன என்பதை நேரிலேயே கண்டறிந்து வந்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். அதுமட்டுமல்லாமல், பொது மருத்துவமனையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமையன்று அங்கேயிருக்கிற மருத்துவர்களை அழைத்து, நானே கலந்துகொண்டு ஒவ்வொரு கூட்டத்தையும் கூட்டி, இது போன்ற குறைகள் இருக்குமானால் அவைகளை நிவர்த்தி செய்வதற்கான கருத்துக்கள் பெறப்பட்டு அதற்கான விரைவான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாதமும், ஸ்டான்லி மருத்துவமனையிலும் இது போன்று செய்யப்பட்டு வருகிறது. மாதம் ஒருமுறை அமைச்சரே கலந்துகொண்டு, இதுபோன்று மருத்துவ மனைகளிலே நேரடி நடவடிக்கை எடுத்து வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தெரிந்திருப்பார்கள். அறுவை சிகிச்சை அரங்கங்களைப் பொறுத்தவரையில், 3 அறுவை சிகிச்சை அரங்கங்களில் இப்போது பொதுப் பணித்துறை மூலமாக வேலைகள் நடைபெற்று வருகின்றன. மற்றும் உள்ள 6 பெரிய அறுவை அரங்கங்களில், மூன்று அரங்கங்களில் வேலை முடிக்கப் பட்டு, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர்தான் வேலை துவங்கப்பட்டு, அது முடிக்கப்பட்டு, அவைகளிலேயும் அறுவை சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன. மற்ற சிறிய அறுவை சிகிச்சை அரங்கங்களிலேயும் அறுவை சிகிச்சை நடைபெற்று வருகின்றன. அங்கே எந்தவிதமான பிரச்சினையும் இப்போது இல்லை. விரைவிலேயே இந்த மூன்று அறுவை சிகிச்சை அரங்குகளினுடைய பணிகள் முடிக்கப்படுமானால், முழுமையாக அங்கே அறுவை சிகிச்சைகள் நடைபெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'அறுவை' என்ற சொல்லை நிறையப் பயன்படுத்தப்படுவதைக் கொஞ்சம் குறைத்தால் நன்றாக இருக்கும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மூன்று அறுவை சிகிச்சை நிலையங்களில் .... (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தவிர்க்க முடியாதது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : ரிப்பேர்கள் செய்யப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதனுடைய மதிப்பீடு எவ்வளவு? எப்போது அந்தப் பணிகள் முடிக்கப்படும் என்கின்ற விவரங்களை அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இன்னும் இரண்டு, மூன்று மாதங்களுக்குள்ளாக அந்தப் பணிகள் முடிக்கப்படும். அதற்கான மதிப்பீடுகள், பொதுப்பணித் துறைக்கு அதற்காகத் தனியாகக் கொடுக்கப்பட்டிருக்கிற தொகையிலேயிருந்து செய்து வருகிறோம்.

5. அறிக்கை அளித்தல்.

மனுக்கள் குழு.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுக்கள் குழுவின் நான்காவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

6. தீர்மானங்கள்

(அ) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு (Senate) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் :

1. திரு. அ. லெ. சுப்பிரமணியன்

2. திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.